செய்தி வெளியீடு எண்: 638 நாள்:26.09.2019

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.9.2019) தலைமைச் செயலகத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 109 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 370 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால், பொது மக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில், தமிழ்நாடு அரசின் 8 போக்குவரத்துக் கழகங்கள் வாயிலாக தமிழ்நாடு மட்டுமின்றி, புதுச்சேரி, கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய அண்டை மாநிலங்களுக்கும் இயக்கப்படும் பேருந்து சேவையின் மூலம் சுமார் 1 கோடியே 74 லட்சம் பயணிகள் பயன்பெற்று வருகின்றனர். மேலும், புதிய பேருந்துகள் மற்றும் வழித்தடங்களை துவக்கி வைத்தல், புதிய பணிமனைகள், அலுவலகக் கட்டடங்கள், போக்குவரத்து தொழிலாளர்களின் நலன் கருதி தரம் மேம்படுத்தப்பட்ட ஓய்வறைகள் கட்டுதல், இணையதளத்தின் வாயிலாக முன்பதிவு வசதி, பள்ளி மாணவர்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள், சென்னை மாநகரில் மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், சென்னை – மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு 30 பேருந்துகளும், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 65 பேருந்துகளும், விழுப்புரம் – அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 27 பேருந்துகளும், சேலம் – அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 57 பேருந்துகளும், கோவை – அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 104 பேருந்துகளும், கும்பகோணம் – அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 41 பேருந்துகளும், மதுரை – அரசு

போக்குவரத்துக் கழகத்திற்கு 20 பேருந்துகளும், திருநெல்வேலி – அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 26 பேருந்துகளும், என மொத்தம் 109 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 370 புதிய பேருந்துகளை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 5 பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இதன்மூலம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மே 2011 முதல் இதுவரை 13,253 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர். விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**